முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 122/2013

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தெய்வசிகாமணி | தொழில் | : – |
| தகப்பனார் பெயர் | : சின்னசாமி | கிராமம் | : அரண்மனைபுதூர் |
| வயது | : 83 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 02–04–2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை :**

நான் வழக்கின் வாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

**7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1940ல் பிறந்தேன். என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என் அப்பா, என் தாத்தாவிற்கு சொந்த ஊர் எது என்றால் கோவில்வழி, ரங்கே கவுண்டன்பாளையம் ஆகும். தாவா எந்த காலை தொடர்பாக தாக்கல செய்துள்ளேன் என்றால் க.ச.எண்.50/2 ஆகும். அந்த காலையின் விஸ்தீரணம் என்ன என்றால் 5.65 ஏக்கர் ஆகும். தாவாச் சொத்து தொடர்பாக என்ன ஆவணங்கள் பார்த்துள்ளேன் என்றால் என் பாட்டனார் காலத்தில் உள்ள ஆவணங்களை பார்த்துள்ளேன். எந்த ஆண்டு ஆவணத்தை நான் முதலில் பார்த்தேன் என்றால் 1918 ம் ஆண்டைய ஆவணத்தை பார்த்தேன்.

2. தாவா சொத்து தொடர்பாக எதிர்வழக்காடிகள் தாக்கல் செய்த ஆவணங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த ஆவணங்கள் 1872ம் ஆண்டில் இருந்து சேச அய்யங்காருக்கு உரிமை பட்டதாக உள்ளது என்றால் அவ்வாறு சொல்வது தவறானது. அந்த ஆவணங்களின் உண்மை தன்மை பற்றி

தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தற்சமயம் வழக்கறிஞர் சொன்னதை வைத்து தெரிந்து கொண்டேன். எதிர்வழக்காடிகள் தாக்கல் செய்த ஆவணங்களை தெரிந்து கொண்டு தான் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கான வருவாய் ஆவணங்கள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரிலும் இல்லை.

3. என் பெயரில் சொத்து உள்ளதைக் காட்ட வருவாய் ஆவணங்கள் உள்ளது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பத்திரங்களின் அடிப்படையில் தான் மாற்றப்படும் என்றால் சரிதான். என் மூதாதையர் காலத்தில் இருந்து தற்போது வரை யார் பெயரிலும் வருவாய் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எந்த உரிமை ஆவணத்தின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

4. 7 முதல் 9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 43 முதல் 60 வரையான வில்லங்க சான்றுகளை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து தவிர எனக்கு பூர்வீக சொத்து உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பத்திரத்தை ஒட்டி மாறி உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்து ஆதியில் இனாம் பூமியாக இருந்தது என்றால் சரிதான். இனாம் பூமிகள் அரசர்களால் அரசாங்கத்திற்கு ஊழியம் செய்வதற்கு பட்டயம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. என் தந்தை வழி முப்பாட்டனாரின் அப்பா பெயர் காளியப்ப கவுண்டர் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டருக்கு எத்தனை மக்கள் என்றால் 5 பேர். அவர்களின் பெயர் சொல்ல முடியுமா என்றால் 5 நபர்கள் இருக்கிறார்கள் பெயர் எனக்கு தெரியாது. அதில் ஒரு மகன் என் தாத்தா நாச்சியப்ப கவுண்டர் என்றால் சரிதான். நாச்சியப்ப கவுண்டருக்கு எத்தனை மக்கள் என்றால் 3 பெண்கள் 1 ஆண்மகன். அந்த ஆண் மகன் பெயர் என்ன என்றால் என் அப்பா சின்னச்சாமி கவுண்டர்.

6. என் தாயார் பெயர் என்ன என்றால் நஞ்சம்மாள் ஆவார். என் தாயார் 1988 லும் என் அப்பா 1999 லும் காலமாகி விட்டனர் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர், 2 ஆண் மக்கள் ஒரு பெண் மகள். அதில் சரவணபவன் திருமணமாகி குழந்தை இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு என் சகோதரி பாகப்பிரிவினை கோரி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.603/2012 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் விவரங்கள் சொல்லி தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. அ.வ.எண்.603/2012 வழக்கில் க.ச.எண்.50 சேர்க்கப்பட்டதா என்றால் இல்லை. அ.வ.எண்.603/2012 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் க.ச.எண்.50/2 சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்று சொல்லி உள்ளேன் என்றாலும், அந்த விவரம் நீதிமன்ற தீர்ப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.603/2012 வழக்கின் தீர்ப்பை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்தபோது 1 முதல் 3 பிரதிவாதிகளான அறநிலையத்துறை மற்றும் கோவிலை மட்டும் தான் தரப்பினராக சேர்த்து தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

8. தாவா வழக்குரையில் கண்டுள்ள விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான். தாவா வழக்குரை பத்தி 11ல் எனது உடன் பிறந்தவர்கள் சரவணபவன், சந்திரசேகரன், புஷ்பம் ஆகியோர் வாய்மொழியாக விடுதலை கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா தொடர்ந்து நடத்தாமல் கடந்த 2017ம் ஆண்டு தள்ளுபடியாகி விட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு என் சகோதரி புஷ்பம், சந்திரசேகரனின் வாரிசுகள் மனு தாக்கல் செய்து 4 முதல் 6 பிரதிவாதிகளாக இணைத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

9. 4 முதல் 6 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் நான் சொன்ன விடுதலையை ஒத்துக் கொண்டார்களா என்றால் அதை பற்றி எதுவும் சொல்லவில்லை. 30.11.2010 ம் தேதி கோட்டாட்சியரிடம் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த மனு **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. பி.வா.சா.ஆ.9 குறித்த விவரத்தை தாவா பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த மனுவின் விசாரணைக்கு கோட்டாட்சியரின் முன்பு நான் நேரில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன். அந்த விசாரணையில் சுப்பைய அய்யங்காரின் வாரிசுகள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த மனுவின் பேரில் கோட்டாட்சியர் உத்தரவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. உத்தரவு நகல் எனக்கு வழங்கப்படவில்லை.

11. நான் கொடுத்த மனு என்ன ஆனது என்ற விவரம் கேட்டு கடிதப் போக்குவரத்து எதுவும் செய்தேனா என்றால் இல்லை. கோட்டாட்சியரிடம் தாவா சொத்து பொறுத்து வாய்மொழி விடுதலை தவிர வேறு ஆவணம் உள்ளதாக சொன்னேனா என்றால் 2 நீதிமன்ற உத்தரவுகள் உள்ளதாக சொன்னேன். பி.வா.சா.ஆ.9 ல் என் தாயார் என் பெயரில் உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

12. என் தாயார் உயிருடன் இருந்தபோது எனக்கு ஆவணம் எதுவும் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் தேவைக்கேற்றபடி ஆவணங்களை தயார் செய்து கொள்வேன் என்றால் சரியல்ல. சுப்பைய அய்யங்கார் மற்றும் அவரிடம் கிரயம் பெற்ற நபர்களிடம் இருந்து சொத்தை அபகரிக்க நான் திரை மறைவில் இருந்து முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2010 ம் ஆண்டு கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனுவில் சுப்பைய அய்யங்காரின் வாரிசுகள் சேர்த்துள்ளதால், இந்த தாவா உண்மையாக இருந்தால் அவர்களையும் இந்த தாவாவில் கட்சி சேர்த்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

13. பொதுவாக ஒரு சொத்தின் உரிமையாளர் தான் குத்தகைக்கு கொடுக்க முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டனுக்கு செல்லப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டன் எழுதி வைத்துக் கொடுத்த புஞ்சை கிணறு குத்தகை சாகுபடி தஸ்தாவேஜு என்று உள்ளது என்றால் சரிதான். என் கொள்ளுத் தாத்தா காளியப்ப கவுண்டர், என் தாத்தா நாச்சியப்ப கவுண்டர் சொத்தின் உரிமையாளர்களாக இருந்ததில்லை, குத்தகைதாரராக தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்த கூடுதல் பிரமாண வாக்குமூலம் பத்தி 19 ல் சொல்லி உள்ள சேஷ அய்யங்கார் என் தாத்தா காளியப்ப கவுண்டருக்கு குத்தகை சீட்டு எழுதிக் கொடுத்த ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 04.01.1872 ம் தேதியிட்ட சேஷ அய்யங்காரால் என் தாத்தா காளியப்ப கவுண்டனுக்கு தாவா சொத்து பொறுத்து எழுதிக் கொடுத்த குத்தகை சீட்டு என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. என் கொள்ளுத் தாத்தா காளியப்ப கவுண்டர், என் தாத்தா நாச்சியப்ப கவுண்டர் சொத்தின் உரிமையாளர்களாக இருந்ததில்லை, சேஷ அய்யங்காரிடம் குத்தகைதாரராக தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பொறுத்து கோபி இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் 1968 ம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து என் தாயார் மாண்புமிகு கோயம்புத்தூர் சார்பு நீதிமன்றத்தில் பல்வகை மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

16. கோபி இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் 1968 ம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவில் சேஷ அய்யங்கார் விசாரிக்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன்.

17. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் கோபி இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் 1968ம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவு என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.11 உத்தரவில் பெரும்பணை வரதராஜ பெருமாள் கோவில் அதற்காக அதன் பூசாரி கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்காருக்கு க.ச.எண்.50/2ல் 5.63 ஏக்கருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுவில் கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்கார் விசாரித்தார்களா என்றால் இந்த வழக்கில் அவர் இல்லாததால் விசாரிக்கவில்லை.

18. பி.வா.சா.ஆ.11க்கு எதிராக சி.எம்.ஏ.429/1969 என்ற மனுவை என் தாயார் நஞ்சம்மாள் மற்றும் சுப்பம்மாள் ஆகியோர் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். சி.எம்.ஏ.429/1969 என்ற மனுவில் கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்காரை தரப்பினராக சேர்த்தோமா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் சி.எம்.ஏ.429/1969 உத்தரவு என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.12** அக குறியீடு செய்யப்படுகிறது. சி.எம்.ஏ.429/1969 மனுவில் கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்காருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்பட்டதா என்றால் சம்பந்தமில்லாத நபர் என்பதால் அறிவிப்பு அனுப்பப்படவில்லை.

19. சி.எம்.ஏ.429/1969 மனுவில் 31.12.1956ம் தேதி பொள்ளாச்சி சார் ஆட்சியர் கொடுத்த உத்தரவில் மேல்வாரம் மட்டும் கோவில் வசமும், கீழ்வாரம் கோவில் வசமில்லை என பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எங்கள் தரப்பில் சான்றாவணம் 1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 31.12.1956ம் தேதி பொள்ளாச்சி சார் ஆட்சியர் கொடுத்த உத்தரவு T.D. 130 க்கு கட்டுப்பட்ட காலைக்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன்படி தான் சி.எம்.ஏ.429/1969 மற்றும் 311/1969 என்ற இரண்டு மனுக்களுக்கும் பொதுவான உத்தரவு (common order) பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

20. சி.எம்.ஏ.429/1969 மற்றும் 311/1969 என்ற இரண்டு மனுக்களுக்கும் பொதுவான உத்தரவு (common order) பிறப்பிக்கப்பட்ட பிற்பாடு மீண்டும் கோபி செட்டில்மெண்ட் தாசில்தாரை விசாரணை செய்ய ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த விசாரணையில் என் தாயார் நேரில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதுபோல எந்த சம்பந்தமும் நடக்கவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் 12.07.1972ம் தேதி நஞ்சம்மாள் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம் என்றால் என் தாயார் ஆஜராகி எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை.

21. கோபி செட்டில்மெண்ட் தாசில்தாரை மறுவிசாரணை செய்தபோது என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மறு விசாரணை ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது. மறு விசாரணையின் இறுதியில் ஆர்.ஆர்.17/72 உத்தரவின்படி கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்கார் பெயரில் 8(2)(1)(எ)ன்படி ரயத்துவாரி பட்டா வழங்கி உத்தரவாகி உள்ளது என்றால் சரியல்ல. கடந்த 1984ம் ஆண்டு நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் நில உரிமையாளர் பெயர் தமிழக அரசால் பதிவேற்றம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

22. மேற்படி சொத்துக்கு சுப்பைய அய்யங்கார் தான் கந்தாயம் செலுத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. நானோ என் அப்பாவோ கந்தாயம் செலுத்தியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் பட்டா எண் 9 கே.எஸ்.எஸ்.சுப்பைய அய்யங்கார் பெயரில் உள்ளது என்றால் தவறுதலாக ஏற்பட்டுள்ளது. அந்த பட்டா **பி.வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.9 ஆவணம் சேஷ அய்யங்கார் பெயரில் இருந்து என் பெயருக்கு மாற்ற கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13ல் உயிலின் அடிப்படையில் உரிமையிருப்பதாகவும், இந்த வழக்கில் வாய்மொழி விடுதலையின் அடிப்படையில் உரிமை மூலம் ஏற்பட்டிருப்பதாகவும் முன்னுக்கு பின் முரணாக சொத்துக்கு உரிமையில்லாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

23. பி.வா.சா.ஆ.9 ல் கோட்டாட்சியர் சுப்பைய அய்யங்கார் பெயரில் உரிமை மூலம் இருப்பதாக என் மனுவை தள்ளுபடி செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சேஷ அய்யங்காரை இந்த தாவாவில் ஏன் கட்சி சேர்க்கவில்லை என்றால் இந்த வழக்குக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்பதால் கட்சி சேர்க்கவில்லை.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.02 16:50:18 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.